அசல் வழக்கு எண். 164/2012 தேதி. 05.02.2020

வா.சா.1 அருணாச்சலம்

<u>4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் அருணாச்சலம் என்பதற்கு அடையாள ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். எனது தகப்பனார் பெயர் நல்லுசாமி, தாயார் பெயர் நாகம்மாள். எனது பாட்டா பெயர் பழனிமுத்து. எனது பாட்டி பெயர் பழனியம்மாள். அவர்களுக்கு நல்லுசாமி, கந்தசாமி, கருப்பண்ணன், மாணிக்கம் பிள்ளைகள். எனது தகப்பனாருக்கு நான், குழந்தைவேல், பாப்பாத்தி (எ) முத்துலெட்சுமி பிள்ளைகள். எனது சித்தப்பா கந்தசாமி திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார். அவரது இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. இறப்பை பதிவு செய்யவில்லை. எனது மற்றொரு சித்தப்பா கருப்பண்ணன் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார். மற்றொரு சித்தப்பா மாணிக்கம் 1970 ஆம் வருடம் இறந்தார். அவரது மனைவி ராஜாமணி 12.05.2012-ல் இறந்துவிட்டார். அவர்களது இறப்பு சான்றிதழும் தாக்கல் செய்யவில்லை. எனது தகப்பனாருக்கு எனது தாயார் மட்டும் ஒரே மனைவி. எனது தகப்பனார் இறக்கும்போது எனக்கு 7 வயது இருக்கும். 2ம் பிரதிவாதி சிறும்பாயியின் கணவர் பெயர் நல்லுசாமி. நல்லுசாமியின் தகப்பனார் பெயர் குழந்தைவேலு. அவர் எனது அண்ணன். நல்லசாமி எனது அண்ணனின் நேரடி வாரிசு தான். நல்லுசாமியுடன் பிறந்தவர்கள் சண்முகபிரியன், செந்தில்குமார் ஆகும். சண்முகபிரியன் இறந்துவிட்டார். நல்லுசாமியின் வாரிசுகள் உமாமகேஸ்வரி, இளவரசன். இளவரசனுக்கு தற்போது 18 வயது இருக்கும். வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் அவருக்கு 12, 13 வயது இருக்கும். ராஜாமணி மேற்படி நல்லுசாமியை தத்தெடுத்து வளர்த்தார் என்றால் சரியல்ல. ராஜாமணி வயதான காலத்தில் புதுகல்லுப்பட்டியில் இருந்தார். நான் கே.துறையூரில் வசித்து வருகிறேன். நான் ராஜாமணியை வாரத்தில் 2 நாட்கள் சென்று பார்த்து வருவேன். மற்ற நாட்களில் எனது வீட்டில் உள்ளவர்கள் பார்த்து கொள்வார்கள். 4ம் பிரதிவாதி எங்கள் பரம்பரையை சேர்ந்தவர் தான். 4ம் பிரதிவாதிக்கு ராஜாமணி உயில் எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் உயில் எழுதி வைக்கவில்லை. 2012 ஆம் வருடத்தில் வழக்குமூலம் ஏற்பட்ட காலத்தில் 4ம் பிரதிவாதி இளவராக இருந்ததால் எந்த ஆவணத்திலும் ஈடுபடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் ராஜாமணியின் தாயார் நல்லம்மாளுக்கு பாத்தியப்பட்டது. அவர் ராஜாமணி பெயருக்கு உயில் எழுதி வைத்திருந்தார். ராஜாமணிக்கு வேறு வாரிசுகள் கிடையாது. ராஜாமணியின் கொழுந்தனார் மகன் என்ற முறையில் நான் அவருக்கு வாரிசு. தாவா சொத்தை நாங்கள் தான் அனுபவம் செய்து வருகிறோம். நானும், 1ம் பிரதிவாதி முத்துலெட்சுமியும் அனுபவம் செய்து வந்தோம். 1ம் பிரதிவாதி இறந்துவிட்டார். தாவா சொத்தை நாங்கள் அனுபவம் செய்து வருகிறோம் என்பதற்கு வருவாய் ஆவணங்கள்

எதுவும் தாக்கல் செய்யவில்லை. 4ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் உரிமை உள்ளது என்றால் சரிதான். நானும், 1ம் பிரதிவாதியும் கூட்டாக தான் அனுபவம் செய்து வந்தோம். நாங்கள் இருவரும் பாகம் பிரித்து கொள்ளவில்லை. நானும், எனது சகோதரர்களும் பாகம் பிரித்து கொள்ளவில்லை. தாவா சொத்தில் எங்களது அனுபவத்தை 4ம் பிரதிவாதி எவ்வித இடையூறும் செய்யவில்லை என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதியை பொறுத்து எனது வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

(6 முதல் 16 வரையான பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள் படி குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)